உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.689/2023

| | |
|---|---|
| பெயர் | :செல்வி(அ.சா.9) |
| தகப்பனார் பெயர் | : |
| கணவர் பெயர் | :பெரியஅழகன் |
| வயது | : |
| கிராமம் | :துவராபதி |
| வட்டம் | :நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் |
| தொழில் | :கூலிவேலை |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

19.08.2025

முதல் விசாரணை:

அ.சா.1 செல்வமணி என் உடன்பிறந்த தம்பி ஆவார். தற்போது சாட்சியம் அளித்த அ.சா.8 பெரியநாச்சி என்னுடைய அக்கா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 செல்வமணி, மீனாட்சியை 2ம் திருமணம் செய்து கொண்டார். ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1 செல்வமணிக்கும் இடையே என்ன பிரச்சினை நடந்தது என்பது எனக்கு தெரியாது. மீனாட்சி இறந்த போது காவலர்கள் என்னை விசாரணை செய்தார்களா என்று நினைவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

என்னை என் தம்பியின் மனைவி மீனாட்சி இறந்த அன்று காவல்நிலையத்தில் இருந்து வந்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். கடந்த 03.06.2022ம் தேதி காலை 6.45 மணியளவில் என் தம்பி வீட்டில் மீனாட்சி தூக்குமாட்டிக்கொண்டு தற்கொலை செய்து கொண்டது தொடர்பாக ஆஜர் எதிரிகளான இறந்த மீனாட்சியின் தம்பியான 1வது எதிரி வடிவேல் மற்றும் அவரது உறவினர்களான 2 மற்றும் 3ம் எதிரிகள் தற்கொலைக்கு காரணம் அ.சா.1 என் தம்பியான செல்வமணிதான் காரணம் என்று 1வது எதிரிகையில் மறைத்து வைத்திருந்த சூரிகத்தியை வைத்து, அ.சா.1 செல்வமணியின் வலது மார்பில் குத்தி காயத்தை ஏற்படுத்தினார்

என்றும், ஆஜர் 2, 3 எதிரிகள் மேற்படி சம்பவத்திற்கு துணையாக இருந்து 1வது எதிரி கத்தியால் குத்துவதற்கு காரணமாக செயல்பட்டார்கள் என்று காவல்துறை விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.19 18:29:08 +0530

Assistant Sessions Judge

Melur